# ஜோடி குருஸ் புதினங்களில் பரதவர்களின் மருத்துவ முறைகள்

*கா. ஐரின்*
*உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை*
*சி.எஸ்.ஐ பிசப் அப்பாசாமி*
*கலை மற்றும் அறிவியல் கல்லூரி*

மனிதன் தனக்கு உண்டான நோய்களுக்குப் பேய், துர்தேவதைகளுமே காரணம் என நம்பினான். இதனால் நோய்களைத் தீர்க்க மந்திரவாதிகளை நாடினர். காலப்போக்கில் இயற்கையின் மூலம் நோய்களைத் தீர்த்தனர். நாட்டுப்புற மக்கள், அன்றாடம் தம் வாழ்வில் கையாளும் மருத்துவ முறைகளை நாட்டுப்புற மருத்துவம் என்று கூறுவர்.

நாட்டு மருத்துவம், பாட்டி வைத்தியம், கை வைத்தியம் என பலவாறாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இக்காலத்தில் சித்த வைத்தியம், ஆயுர்வேதம், யுனாணி, ஹோமியோபதி, அலோபதி, அக்குபஞ்சர், ஆங்கில மருத்துவம் எனப் பல்வேறு மருத்துவ முறைகள் வளர்ந்துள்ளன.

“மருந்து முறை சார்ந்த ராஜவைத்தியம், மந்திரமுறை சார்ந்த பூதவைத்தியம், நெருப்பு முறை சார்ந்த ராட்சச வைத்தியம் என நாட்டு மருத்துவ வகைகளை மூன்று நிலைகளில் அடக்குவாருண்டு”.

## தமிழ் இலக்கியங்களில் மருத்துவம்

சங்க இலக்கியந்தொட்டு இக்கால இலக்கியங்கள் வரை மருத்துவம் சார்ந்த குறிப்புகள் ஏராளமாகக் கிடைத்துள்ளன.

‘மருத்துவர்கள் நல்ல கொள்கைகளையும், தூய ஒழுக்கத்தையும் உடையவர்களாயிருந்தார்கள் என்பதை விளக்கிய கொள்கை ‘ஆயுள் வேந்தர்’ என்று சிலப்பதிகாரம் கூறுகிறது’.

உடலில் காயம்பட்டவருக்கு நெய்கிழிவைத்தல், எண்ணெய்பத்தரில் கிடத்தல், ஒடிந்த எலும்புகளை அறுத்தெடுத்தல், புண்களுக்கு மருந்தை வைத்தல், எலி மயிர்க்கம்பளத்தால் போர்த்தல் முதலிய மருத்துவ முறைகள் கையாளப்பட்டன என்பதை

**நெய்கிழி வைக்கப் பட்டார் நெய்ப்பத்தற் கிடத்தப்பட்டார்**
**புக்குழி எ.்.கம் நாடி இரும்பினால் போழப்பட்டார்** **(சிந்தாமணி - 818)**

என்று சிந்தாமணி கூறுகிறது.

உடலில் புண்களை ஆற்ற இசையும் பயன்பட்டன என்பதனை,

**மருப்பு யாழொடு பல்லியங் கறங்க**
**இசைமணி பொறிந்து காஞ்சி பாடி** **(புறநானூறு - 281)**

எனப் புறநானூற்று அடிகள் கூறுகின்றன.

உடல் முழுவதும் புண் பட்டவர்க்கு வைத்தியம் செய்தனர் என்பதை,

**முது மரப்பொந்துபோல, முழுமையும் புண்களுற்றார்க்கு**
**இது மருந்தென்ன நல்லார் இழுது சேர்கவளம் வைத்து**
**நெய்கிழி பயிலச் சேர்த்தி**
**நுதிமயிர்த் துகில்குப் பாயம் புகு** **(சிந்தாமணி - 819)**

என்று சிந்தாமணிப் பாடலடிகள் உணர்த்துகின்றன.

பண்டைய காலம் தொட்டே மருத்துவம் பற்றிய செய்திகள் தமிழிலக்கியத்தில் இடம் பெற்றிருந்தமையை மேற்காண் பாடல்களின் வழி அறிய முடிகிறது.

## நாட்டுப்புற மருத்துவ வகைகள்

நாட்டுப்புற மருத்துவத்தை தோன்யோடர் இருவகைகளாகப் பகுக்கின்றார். அவை இயற்கைமருத்துவம், மத மாந்திரிக மருத்துவம் எனப்படும்.

**இயற்கை மருத்துவம்**

மூலிகை, தாது போன்ற இயற்கைப் பொருட்களைக் கொண்டு மருந்தாக்கி உட்கொள்வதே இயற்கை மருத்துவம் என்று குறிப்பிடுவர். இயற்கை மருத்துவம் மனித இனம் தோன்றிய காலத்திலிருந்தே உள்ளது.

- மனிதர்கள் உட்கொள்ளும் வெளிப்பூச்சு
- பிராணிகள் உட்கொள்ளும் வெளிப்பூச்சு

என்று பகுத்துக் காட்டுகிறார்.

பரதவர்கள் இயற்கை மருத்துவத்தின் மூலம் நோய்களைத் தீர்த்தனர். ஆசிரியர் ஜோ டிகுருஸ் தனது இரு புதினங்களிலும் பல இடங்களில் இயற்கை மருத்துவத்தைப் பரதவர்கள் கையாண்டுள்ளதாகப் படைத்துள்ளதைக் காண முடிகின்றது.

**மஞ்சள் காமாலைக்கு மருந்து**

‘ஆழி சூழ் உலகு’ புதினத்தில் மடுத்தீன் என்பவர் மஞ்சள் காமாலை ஏற்பட்டு படுத்தபடுக்கையாய் இருந்தார். அவருக்கு அப்பொழுது இயற்கை வைத்தியர் மருந்து கொடுத்தார்.

‘கருத்தா, எனக்குத் தெரியாதாக்கும்... ஏற்கனவே உள்ள மருந்துலயும் கீழாநெல்லி
குடுக்கத்தாஞ் செய்தம். நாடிதாம் எனக்கு புடிபடுல. (ஆழி சூழ் உலகு - 30)

பரதவர்கள் மஞ்சள் காமாலைக்கு கீழாநெல்லிச்சாறு கொடுத்தனர். இவ்வைத்திய முறையை நாட்டுப்புற மக்களிடையே இன்றும் காண முடிகின்றது.

**பாம்புக்கடிக்கு மருந்து**

‘ஆழி சூழ் உலகு’ என்ற புதினத்தில் தொம்மந்திரை மகன் பரதேசியை பாம்பு கடித்துவிட்டது. வைத்தியர் நவமணி வந்து மருந்து கொடுத்தார்.

நல்ல மிளகுத் தூளையும் சிறியாநங்கை இலையையும் திரும்பவும் கையில் வைத்துக்
கசக்கி பரதேசியின் வாயில் சொட்டுகள் விழுமாறு பிழிந்தார். (ஆழி சூழ் உலகு - 88)

எனவே பாம்புக்கடிக்கு மிளகுத்தூள், சிறியாநங்கைசாறு எடுத்துக்கொடுத்தமை மூலம் பரதவர்கள் கைவைத்தியத்தை அதிக அளவில் பயன்படுத்தினர் என்பதை அறியமுடிகின்றது.

**பக்கவாதம் மருந்து**

‘ஆழி சூழ் உலகு’ புதினத்தில் தொம்மந்திரை என்பவருக்குப் பக்கவாதம் வந்து படுத்தபடுக்கை ஆனார். அப்பொழுது ஆனந்தவிளை என்ற இடத்திலிருந்து வைத்தியர் வந்து மருந்து கொடுத்தார்.

‘வேலியில் ஓடும் வக்கையைப் பிடித்து இடித்துச்சாறு பிழிந்து சாராயத்தோடு சேர்த்துக்
குடிக்கச் சொல்லியிருந்தார் வைத்தியர்’ (ஆழி சூழ் உலகு - 328)

என்று வைத்தியர் வக்கை (கொக்கின் இனம்) பிடித்துச்சாறு எடுத்துச் சாராயத்தோடு கலந்து கொடுத்தால் பக்கவாதநோய் குணமாகும் என்பதைக் காண முடிகின்றது.

**காலின் காயத்திற்கு மருந்து**

‘ஆழி சூழ் உலகு’ எனும் புதினத்தில் சிலுவை கிணற்றிற்குள் குதித்த போது காலில் அடிபட்டது.

‘அத வுடுங்க. இப்ப இவனால ஒரு பத்து பதினஞ்சி நாளக்கி கால் ஊனி நடக்க முடியாது.
கொஞ்ச நேரம் ஆவட்டும். தடவி வுட்டுட்டு பப்பாளி இல வச்சி கெட்டிருவம்’
(ஆழி சூழ் உலகு - 466)

என்று சிலுவையின் காலில்பட்ட காயத்திற்குக் கைவைத்தியமாகப் பப்பாளி இலையை வாட்டி அடிபட்ட காலில் கட்டினர்.

**வயிற்றுக் கடுப்புக்கு மருந்து**

‘கொற்கை’ புதினத்தில் செல்விசியர் என்பவர் வயிற்றுக்கடுப்பில் வலி தாங்காமல் இருந்தார். அப்பொழுது தேவமணி வண்டியோட்டி மருந்து கொடுத்தார்.

'பொன்னாவரிச் செடியிலிருந்து காய்களைப் பறித்துச் சாப்பிடக் கொடுத்திருந்தார்'
(கொற்கை - 44)

என்று தேவமணி வண்டியோட்டி பொன்னாவரிச் செடியின் இலைகளைப் பறித்துக் கசாயம் வைத்துக் கொடுக்கச் செல்விசியரின் வயிற்றுக் கடுப்பு நோய் குணமானது.

**நெஞ்சு அடைப்பு மருந்து**

'கொற்கை' புதினத்தில் ஆண்டாமணி என்பவருக்கு நெஞ்சு அடைப்பு ஏற்பட்டது. அப்பொழுது அவர் மனைவி பவுலா கைவைத்தியம் செய்து கொடுத்தார்.

'நெஞ்சி அடைச்சிகிற்று இருக்கோ… வாய்வா இருக்கும். கொஞ்சம் நீத்துப் பாவமும் கருப்பட்டியுந் தரட்டா?' என்றாள் பவுலா. (கொற்கை - 112)

என நெஞ்சு அடைப்பிற்கு நீத்துப்பாவும் (பழைய சோற்றின் கஞ்சி) கருப்பட்டியும் சாப்பிட்டனர், வெறும் வயிற்றில் இஞ்சிச்சாறு கொடுத்தல், வாழைப் பழத்திற்குள் பெருங்காயத்தை வைத்தும் கொடுத்தனர். இவ்வாறு நெஞ்சு அடைப்பைக் கைவைத்தியம் மூலம் சரிசெய்து கொண்டனர் என்பது தெளிவாகின்றது.

**சளிக்கு மருந்து**

'கொற்கை' புதினத்தில் லொஞ்சி என்பவருக்கு சளி ஏற்பட்டுத் துன்பப்பட பிலிப் வைத்தியம் கூறினான்.

'சுக்கு, மிளகு, திப்பிலி, சித்தரத்தி இதுவள ஒரல்ல இடிச்சி பொடி பண்ணி.. சித்தரத்தி தாம் அறபடாது உசுரவாங்கிறும். அரிசி மாவு கூழுல கொதிக்கக் கொதிக்க போட்டுக் கிண்டனும், முக்காக் கொதியா வரும்போது நல்ல ஒடங்குடி சில்லுக் கருப்பட்டியப் போட்டு எறக்கிறனும்'
(கொற்கை - 286)

என்று பரதவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட சளி நீங்க சுக்கு, மிளகு, திப்பிலி, சித்தரத்தையை இடித்து அரிசி மாவுக்கூழுடன் சேர்த்துக் கருப்பட்டி கலந்து சாப்பிடும் பழக்கமும், குழந்தைக்கு ஏற்பட்ட நெஞ்சுச் சளிக்கு சுக்கு, மிளகு, திப்பிலி, நறுக்கு மூலம் இழைத்து நெஞ்சில் போட்டால் சளி நீங்கும் என்று நம்பினார்கள்.

**மூலத்திற்கு மருந்து**

'கொற்கை' எனும் புதினத்தில் குழந்தைசாமி தன் நண்பரிடம் மூலத்திற்கு 'மூலிகை மருந்து' சொல்கிறார்.

'அங்க பக்கத்துல மூலிக மரம் நிக்கிது. காஞ்சரங்குச்சி எலயிம்பாவ.. எந்த காஞ்ச கோடையிலயும் பச்ச பசேல்ன்னு நிக்கிம், அந்த எலைய பறிச்சி கொண்டாந்து, அம்மியில வச்சி நம்ம தொவையல் பருவத்தக்கு அறச்சி ஒரு பருநெல்லிக்கா அளவுல எடுத்து மலவாயில வச்சி கெட்டிற்று படுத்திறணும். காலம்பர கொல்லைக்கி போவும் போது அப்படியே அவுத்துவுட்டுருலாம். மூணு நாள் தொடர்ந்து கெட்டிப் பாருங்கப்பு மூலம் இருந்த எடம் தெரியாம போயிரும்'
(கொற்கை - 721)

என்று மூலம் குணமாக காஞ்சரங்குச்சி இலையை அம்மியில் அரைத்து நெல்லிக்காய் அளவு எடுத்து மூலம் இருக்கும் இடத்தில் மூன்றுநாள் கட்டி வந்தால் குணம் பெறலாம். இதன் மூலம் பரதவர்கள் மூலிகை வைத்தியத்தை நம்பினர் என்பது புலனாகின்றது.

**பால் சுரக்கும் மருந்து**

'ஆழி சூழ் உலகு' எனும் புதினத்தில் சூசை வியாகுலப்பிள்ளையிடம் தனது தங்கை பிள்ளை பெற்றதற்குக் கரமீன் பிடிக்கக் கடலுக்குச் சென்றான்.

'தங்கச்சி கொழந்த பெத்திருக்கா. அதாம் அவளுக்கு கொஞ்சம் கரைவல வச்சி மீன் குடுத்தா அவியல் வச்சித் திம்பா. புள்ள பெத்தவளுக்கு இந்த கரமீன்வ தின்னா பால் நல்ல சொரக்குமாம்'
(ஆழி சூழ் உலகு - 160)

என்று குழந்தை பெற்ற பெண்ணுக்கு அதிகமான பால் சுரக்கக் கரமீன் சாப்பிடுதல், மாங்காய் சாளையை ஓமக்கறி வைத்துச் சாப்பிடுதல் முதலியன பலன் தரும் எனவும் நம்பினர். இவ்வாறு பரதவர்கள் உணவையே மருந்தாகப் பயன்படுத்தியமை அறிய முடிகின்றது.

**சமயச் சடங்குகள் சார்ந்த மருத்துவம்**

மக்களின் வரலாற்றை நோக்கின் நோய்கள் ஏற்பட சில காரணங்கள் இருந்தன என ஆரம்ப காலத்தில் நினைத்தனர். பரதவ சமூகத்தினர் நோயினைத் தீர்ப்பதற்கு மருத்துவரை நாடுவதற்குப் பதிலாக பூசாரியையும், மந்திரவாதியையும் நாடுவதைக் காணலாம். மந்திரம் சமயத்துடன் இணைந்து, சில சடங்கு வடிவில் தோற்றமளிப்பதை மந்திர சமயச் சடங்குகள் என்பர்.

**அம்மை நோய்க்கு மருந்து**

'ஆழி சூழ் உலகு' எனும் புதினத்தில் தொம்மந்திரை என்பவர் அம்மை வந்தால் முத்தாரம்மன் கோயில் சென்று வாழைகுலையும், அரிசிமாவு இடித்து வேண்டுதல் செய்தால் குணமாகும் என மன்றாடியாரிடம் கூறினார்.

'ஆமுல. புள்ளையளுக்கு அம்ம போட்டா மட்டும் யாருக்குந் தெரியாம வாழக்கொலையும் அரிசிமாவும் இடிச்சி இங்க முத்தாரம்மன் கோயில்ல கொண்டு வந்து வக்கிறியள. அதுக்கு கட்டுபோட முடியுமா? (ஆழி சூழ் உலகு - 75)

இவ்வாறு பரதவர்கள் கிறிஸ்தவ சமயத்தை சார்ந்தவர்களாக இருந்தாலும் அம்மை ஏற்படும் போது முத்தாரம்மன் கோயில் சென்று படையல் கொடுத்தால் குணமாகும் என நம்பினர்.

**குழந்தை பிறப்புக்கு**

கொற்கை எனும் புதினத்தில் முத்துலிங்க நாடார் குழந்தை வேண்டி திருச்செந்தூர் முருகனை வேண்டி குழந்தை பிறந்தது.

'இவந்தாம் எளையவம், முத்தவம் சண்முகவேல் சேவியர் பள்ளிகொடத்துல படிக்காம். கடைக்கி வருவாம். கனநாள் புள்ளையில்லாம திருச்செந்தூரானுக்குக் காவடி எடுத்து பொறந்தவம்'

(கொற்கை - 165)

எனவே குழந்தை பிறப்புக்காக திருச்செந்தூர் முருகனிடம் நேர்த்திக்கடனாக காவடி எடுத்து வேண்டி குழந்தை பிறந்தது என நம்பினர்.

**உடல் சுகவீனம்**

'ஆழி சூழ் உலகு' என்ற புதினத்தில் சித்திரையின் கணவன் லிங்கம் உடல் சுகவீனமாக இருந்த போது மருத்துவர்கள் கைவிட்டனர். பிறகு லிங்கம் அந்தோனியர் கோயிலுக்கு அழைத்து வந்து வேண்டுதல் செய்த போது உயிர் பிழைத்தான்.

'உடம்புக்கு முடியாமல் கிடந்த புருஷனை அனைத்து மருத்துவர்களும் கைவிட்ட நிலையில் ஆமந்துறை அந்தோனியர் கோவிலுக்கு கொண்டு வந்து சித்திரை அப்படியே ஆமந்துறையிலேயே தங்கிப் போனாள்' (ஆழி சூழ் உலகு - 260)

எனவே பரதவர்கள் நோய்வாய்பட்ட போது மருத்துவர்கள் கைவிட்ட நிலையில் மதத்தை நம்பினர்.

**மாந்திரீக மருத்துவம்**

மக்கள் தாம் உற்ற நோயினைத் தீர்ப்பதற்கு மதத்தையும், மந்திரவாதத்தையும் தழுவி நிற்பதனை மத மந்திரவாதத்தையும் தழுவி நிற்பதனை மாந்திரீக மருத்துவம் எனலாம். மருந்து வைப்பது, மந்திரம் ஓதுவது, சூனியத்திற்கு எதிர் சூனியம் வைப்பது, ஏவல் முறி நடத்துவது, தாயத்துக் கட்டுவது, பிரார்த்தனை செய்வது, நீராடி வேண்டுவது, வேண்டுதல் வைப்பது, சமயச்சின்னங்களை அணிவது பேன்றவற்றால் நோயினைத் தீர்க்க முயல்வதனை மாந்திரீக மருத்துவம் என்பர்.

**பேய்**

பஞ்சலாமை இறைச்சி பஞ்சு போன்று மென்மையாக இருக்கும். பரதவர்களில் பெரும்பாலோர் ஆமை இறைச்சியைச் சாப்பிடுவதில்லை. ஆனால் ஒவ்வொரு வீட்டின் வாசலிலும் ஆமை ஈரலை

உருக்கி எடுத்த எண்ணெயை சிறிய பாத்திரத்திலோ அல்லது பாட்டிலிலோ கட்டி வைத்திருப்பார்கள். பேய், பிசாசுகளுக்கு ஆமை எண்ணெயின் வாடை பிடிக்காது என்று நம்பினர். பரதவர்கள் கிறிஸ்துவ மதத்தை தழுவினவர்களாக இருந்தாலும் இன்றளவும் பேய், செய்வினை, சூனியம் போன்றவற்றில் நம்பிக்கை அதிகம் கொண்டவர்கள்.

ஓமந்துறையில் உள்ள திருஇருதய அரசரின் அற்புத கெபியில் ஒவ்வொரு மாதத்தின் முதல்வார வெள்ளிக்கிழமை பலர் நாள்பட்ட வியாதியஸ்தர்கள், மருத்துவர்களால் கைவிடப்பட்டவர்கள், செய்வினை, பில்லி சூனியம் என்று இங்கு வந்து வேண்டுதல் செய்து குணமடைந்து சென்றனர்.

**ஆங்கில மருத்துவம்**

பரதவர்கள் இயற்கை வைத்தியம், சமயச் சடங்குகள் சார்ந்த மருத்துவம், மாந்திரீக மருந்துவம் இவற்றை அதிக அளவில் நம்பிக்கையாகத் தம் வாழ்வில் கொண்டிருந்தனர். கல்வி அறிவு பெற்ற பின்னர் ஆங்கில மருத்துவத்தைத் தற்போது அதிக அளவில் நம்புகின்றனர். ஆசிரியர் தனது இரு புதினங்களிலும் பல இடங்களில் மருத்துவக் குறிப்புகளைக் கூறியுள்ளார்.

'கொற்கை' எனும் புதினத்தில் கொற்கையூரில் காலரா, சின்னம்மை பரவியிருந்த அச்சமயம் ஆங்கிலேயர்களின் ஆங்கில மருந்துவம் உதவியால் தடுப்பூசி போட்டு நோய் வராமல் தடுத்தனர். நாய் கடித்தால் தொப்புளைச் சுற்றி ஊசி போடுதல் வழக்கம். பிலிப் என்பவருக்கு கண்ணில் கட்டி ஏற்பட்டு மருத்துவமனை சென்றார். மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் எனக் கூறினர்.

ஆசிரியர் ஜோ டிகுருஸ் தனது புதினங்களில் இயற்கை வைத்தியம் ஆரம்பித்து ஆங்கில முறை மருத்துவத்தில் முடிக்கின்றார். மருத்துவத்தைப் பற்றி பல இடங்களில் கூறியுள்ளார். பரதவர்கள் இயற்கை மருத்துவத்தை விடுத்து இன்று ஆங்கில மருத்துவம் நோக்கிச் செல்வதால் இயற்கை மருத்துவம் தற்காலத்தில் அழிந்து வருவதையும் சுட்டியுள்ளார். குறிப்பாக ஆழி சூழ் உலகில் இயற்கை வைத்தியத்தை அதிக அளவில் பதிவு செய்த ஆசிரியர், கொற்கையின் இறுதிப் பகுதியில் ஆங்கிலசார் மருத்துவமுறை மிகுந்து வருவதையும், அதனால் நம் நாட்டு இயற்கைசார் மருத்துவ முறைகள் புறக்கணிக்கப்பட்டு வருவதையும் பதிவு செய்துள்ளவிதம் குறிப்பிடத்தக்கது.

**துணை நூற்பட்டியல்**

1. ஞானசேகரன் .தே தன்னானே காலாண்டிதழ்,
2. முனைவர் நரேந்திரன் .தி தமிழில் மருத்துவ இதழ்கள்,
3. ஜோ டி குருஸ், ஆழி சூழ் உலகு,
4. ஜோ டி குருஸ், கொற்கை,